ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற போது உரிமம்பெற்ற வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் வைப்பாளரின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதைக் கட்டாயமாக்கல்

2022.01.10 இல் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் வைப்புக்களை ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு வைப்பாளருக்குமெனத் தனித்துவ அடையாள இலக்கமொன்றினைப் பதிவுசெய்யுமாறு 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் வாயிலாக மத்திய வங்கியானது முறையே அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஆகியவற்றை வேண்டியுள்ளதுடன் அவர்களது ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களது தனித்துவ அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தலைப் பூரணப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு 2023.12.31 வரை காலம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு வகையான வைப்பாளர்களுக்கும் பின்வரும் தனித்துவ அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதை அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் ஆரம்பிக்கும்:

| வைப்பாளரின் வகை | அடையாள இலக்கத்தின் வகை | குறிப்புகள் |
|---|---|---|
| **தனிப்பட்டவர்கள்** | | |
| இலங்கைப் பிரசைகள் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | கணக்குகளை ஆரம்பிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், வைப்பாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அவர்களது முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைப் பதிவுசெய்வது கட்டாயமாகும். |
| இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியே வதிபவர்/ நிரந்தர வதிவிட உடைமையாளர்/ தற்காலிக வதிவிட உரிமையாளர்), இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கையில் வதிபவர்), இரட்டைப் பிரசாவுரிமையினை பெற்ற இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதிபவர்) | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தேசிய அடையாள அட்டை வைப்பாளர்களினால் தற்காலிகமாகக் கையளிக்கப்பட்டிருக்கும் போது இலங்கையர் கடவுச்சீட்டு இலக்கத்தினைப் பயன்படுத்தமுடியும். |
| இலங்கையரல்லாப் பிரசைகள் | வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இலக்கம் | இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டவர் உட்பட (இலங்கைக்கு வெளியே வதிபவர்) இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ள வெளிநாட்டுப் பிரசைகள், வெளிநாட்டு இராசதந்திரிகள். |
| பராயமடையா வைப்பாளர்கள் | பிறந்த திகதி + பிறப்புச் சான்றிதழ் இலக்கம் உ-ம்: (வருடம்.மாதம்.திகதி. பிறப்புச் சான்றிதழ் இல.) | 12 எண்களைக் கொண்ட இலக்கமொன்றினை உருவாக்குவதற்காக அதே கூட்டினுள் பிறந்த திகதியினைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கத்தினை இடுதல் வேண்டும். |
| **நிறுவனங்கள்** | | |
| கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் | கம்பனிப் பதிவு இலக்கம் | |
| அரசசார்பற்ற அமைப்புக்கள் | அரசசார்பற்ற அமைப்புகளுக்கான தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் | |
| தனியுரிமை/ பங்குடமை/ இணைந்த கூட்டு முயற்சிகள் போன்ற பிரதேச/ உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | வியாபாரப் பதிவு இலக்கம் | |
| கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்களும் | தொடர்பான அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் | |

தனிநபரல்லாத வைப்புகளை ஆரம்பிக்கின்ற போது, மேலே குறிப்பிட்டவாறு தனித்துவமான அடையாள இலக்கங்களாக இயைபுடைய பதிவுசெய்யும் அதிகாரிகளால் வழங்கப்பட்ட நிறுவனங்களின் பதிவிலக்கத்தினைப் பதிவுசெய்வது உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் கட்டாயமானதாகும். ஆகையால், இயைபுடைய அதிகாரசபைகளின் கீழ் தமது பதிவினை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளாத சங்கங்கள், கழகங்கள், அமைப்புகள், அறக்கட்டளைகள் போன்றன உள்ளடங்கலாக அனைத்து நிறுவனங்களும் உரிமம்பெற்ற வங்கிகளுடன் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுடன் வைப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமது பதிவினைப் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.

இவ்விதியானது ஏற்கனவே காணப்படுகின்ற கணக்குகளுக்கும் ஏற்புடையதாகவிருக்கும் என்பதுடன் கணக்கை/ கணக்குகளை ஆரம்பிக்கின்ற நேரத்தில் தொடர்புடைய தனித்துவமான அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்காவிடின், விடயத்திற்கேற்றவாறு ஏற்புடைய உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றிற்கு தொடர்புடைய தனித்துவமான இலக்கங்களை அறிவிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அனைத்து வைப்பாளர்களும் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இப்புதிய வழிமுறையினை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக, உரிமம்பெற்ற வங்கிகளினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் தகவல் முகாமைத்துவச் செயன்முறையின் ஆற்றல்மிகு தன்மையினையும் ஒருமைப்பாட்டினையும் வலுப்படுத்துவதற்கும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் மூலம் தகவல்களை தொகுப்பதனை வசதிப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

பணிப்பாளர் - தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
இல.30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01